සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development

සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT

මගේ අංකය
எனது இல DSD/HO/6/EP/2/6-2018
My No

ඔබේ අංකය
உமது இல ..........................................
Your No

දිනය
திகதி 2018.05.18
Date

சகல மாவட்டச் செயலாளர்கள் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர்கள்,
சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள்.

**சமுர்த்தி பிரதேச அமைப்புக்கள் சமுர்த்தி மாவட்டக் குழுக்களுக்கு அங்கத்தவர்களை நியமித்தல்**

2013ம் ஆண்டின் 01ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி பிரதேச அமைப்புக்களை ஆரம்பித்து பதிவு நடவடிக்கைகள் முடிக்கப்பட்டுள்ளதனால் ஒவ்வொரு பிரதேச அமைப்புக்களின் பொருட்டும் மேலே கொல்லப்பட்ட கொள்கை சட்டத்தின் III வது பிரிவின் 15(2) (ஈ) இற்கமைய பணிப்பாளர் தலைமையதிபதியால் பெயரிடப்படுகின்ற பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் அங்கத்தவர்கள் மூவரை, நியமிக்க வேண்டியதுடன் சட்டத்தின் IV வது பகுதியின் 19(2) (ஈ) இற்கமைய மாவட்டக் குழுவின் பொருட்டும் அங்கத்தவர்கள் மூன்று பேரை நியமித்தல் வேண்டும்.

03) ஆகையினால் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளில் செயற்பாட்டுடனும் தன்னார்வத்துடனும் செயற்படுவதற்கு ஆற்றலுள்ள கீழே குறிப்பிடப்படும் தொழில்வாண்மையாளர்கள் அல்லது மக்கள் தலைவர்களிலிருந்து பொருத்தமான மூவர் வீதம் தங்களது மாவட்டத்தின் ஒவ்வொரு சமுர்த்தி பிரதேச அமைப்பின் பொருட்டும் தெரிவு செய்து நியமித்து அனுப்ப வேண்டியதுடன் சமுர்த்தி மாவட்டக் குழுவின் பொருட்டும் அவ்வாறான மூவரை தெரிவு செய்து அனுப்புதல் வேண்டும்.

1) ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர் அல்லது அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர்.
2) தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் தொழில்வாண்மையாளர்கள்.
3) பிரதேசத்தில் வசிக்கும் கல்விமான்கள்.
4) பிரதேசத்தில் வசிக்கும் கலைஞர்கள்.
5) சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்கள்,
6) பிற திறமையான சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள்.

4) அவ்வாறு தெரிவு செய்யும்போது சமுர்த்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு பயனுள்ள பங்களிப்பினை வழங்கக்கூடிய தகுதியான அங்கத்தவர்களை தெரிவு செய்து கொள்ள வேண்டியதுடன் பிரதேச அமைப்புக்கள் மற்றும் மாவட்ட குழுக்களுக்கு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியலை இணைப்பு 01 இன் பிரகாரம் மாவட்டச் செயலாளரின் அங்கீகாரத்துடன் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவுக்கு 2018.07.15ம் திகதிக்கு முன்னர் மின்னஞ்சல் (coor@divinegumagov.lk) அல்லது தொலைநகல் (011 2873794 / 011 2889002) மூலமாக அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

06. மாவட்ட செயலாளரால் சிபாரிசு செய்யப்பட்ட பெயர்ப்பட்டியலுக்கமைய சமுர்த்தி பிரதேச அமைப்பு மற்றும் சமுர்த்தி மாவட்டக் குழுவின் பொருட்டு அங்கத்தவர்களை நியமிப்பது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் என்பதனை வினயமுடன் அறியத்தருகின்றேன். குறித்த பெயர்ப்பட்டியல்கள் கிடைத்ததன் பின்னர் பிரதேச / மாவட்ட குழுக்களின் பொருட்டு உரிய நியமனக் கடிதங்கள் இத்திணைக்களத்தின் மூலம் வழங்குவதற்கு நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படும் என்பதனை மேலும் அறியத்தருகின்றேன்.

இவை தொடர்பில் தங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பினை போற்றி மதிக்கின்றேன்.

ஜே. தடல்லகே.
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்

1. கௌரவ சமூக வலுவூட்டல் அமைச்சர், திரு.பீ. ஹரிசன் அவர்கள் - த.கூ.க. பொருட்டு
2. செயலாளர், சமூக வலுவூட்டல் அமைச்சு - த.கூ.க. பொருட்டு
3. சகல பிரதேச செயலாளர்கள் - த.கூ.க. பொருட்டு